[2006 ஆகஸ்ட் 2

(இ) குவைத்தில் விபத்தில் உயிரிழந்தவர் உடலைக் கொண்டுவருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், விழுப்புரம், பெரம்பலூர் மூன்று மாவட்டங்களிலிருந்து தங்களுடைய வயிற்றைக் கழுவுவதற்காக வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்ற 16 தமிழர்கள் அங்கே விபத்தில் உயிரிழந்து, உயிரிழந்த அந்த 16 தமிழர்களுடைய உடல்களை இந்தியாவிற்கு, தமிழகத்திற்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்கின்ற அடிப்படையில் தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர் அவர்கள், தமிழகத்தினுடைய வரலாற்றில் இல்லாத அளவிற்கு நான்காவது தினமான இன்று இன்னும் சில மணி நேரங்களிலே, அந்த உடல்கள் தாய் மண்ணிற்கு வருவதற்கான ஏற்பாடு செய்த முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கு, எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல என்னுடைய தொகுதியைச் சேர்ந்த, திரு. எழில் அரசன் என்பவர் ரியாத் என்ற பகுதிக்கு வேலைக்குச் சென்றார். அங்கே அவர் இறந்திருக்கிறார். இறந்தவர் உடலை கொண்டு வந்து தமிழகத்திலே அவர்களுடைய பெற்றோர்களிடத்திலே ஒப்படையுங்கள் என்று இந்திய தூதரகத்திற்கும், அந்த நாட்டினுடைய தூதரகத்திற்கும் நம்முடைய மத்திய அரசுக்கும் தெரிவித்து இத்தனை நாட்கள் ஆகியும், கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் ஆகியும், அந்த உடலைக்கூட அந்தப் பெற்றோர்கள் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, புலம்பெயர்ந்து போய் வேலைக்குச் செல்கின்ற அந்தத் தமிழர்கள் அப்படி இறக்கின்ற நேரத்தில் அவர்களின் உடலை திருப்பி நம்முடைய தாயகத்திற்கு அனுப்புவதற்கான நடைமுறைச் சிக்கல்கள், அந்த அரபு நாடுகளில் இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், இந்தச் செய்திகளை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று வெளிநாடுகளில் தமிழர்கள் உயிரிழக்கின்றபோது, அவர்களது உடலை உடனடியாக இங்கு கொண்டு வருவதற்கான ஒரு நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

2006 ஆகஸ்ட் 2] [திரு. தி. வேல்முருகன்]

அதேபோல, லெபனான் நாட்டிலே போர் ஏற்பட்டபோது, தமிழ்நாட்டிலிருந்து, ஆயிரக்கணக்கான தமிழர்கள், அந்தப் போரினால், குண்டுமழைக்குப் பலியாகிவிடுவார்களோ என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி உதவியைப் பெறுவதற்கு முன்பாக தமிழகத்தினுடைய நிதியினைச் செலவிட்டு, தாய்த் தமிழ்நாட்டிற்கு வரவழைத்து இருக்கிற அந்த நல்ல உள்ளம் படைத்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை இந்த நேரத்திலே பாராட்டி, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த எழில் அரசனுடைய உடல், விரைவாக தாய் மண்ணிற்குத் திரும்புவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் தெரிவித்த இந்தக் கருத்து எல்லோருடைய உள்ளத்தையும் உருக்கக்கூடியதுதான். வெளிநாடுகளுக்குச் சென்று வேலை தேடுகின்ற வேதனை, இன்னமும் இந்தியாவில், குறிப்பாக தமிழகத்தில் தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படுகின்ற வரையில் இந்த நிலை தொடரத்தான் செய்யும். இருந்தாலும், அவ்வப்போது ஏற்படுகின்ற, இந்தத் துன்ப துயரங்களை அகற்றுகின்ற வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அவர் குறிப்பிட்ட எழில் அரசனுடைய உடலை இங்கே கொண்டுவருவதற்கான முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) மாங்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக வந்துள்ள செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள் துறைக்கு பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னால், இன்று படிப்படியாக அந்தத் துறை சீர்படுத்தப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. ஆனால், நேற்று மாங்காடு காவல் நிலையத்தில் இரண்டு தலைமைக் காவலர்கள் மாமூலை பிரித்துக்கொள்வதிலே அவர்கள், ஒருவருக்கொருவர் கட்டிப்புரண்டு, காவல் நிலையத்திலேயே சண்டையிட்டு, இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக செய்திகள் வந்திருக்கின்றன. மாண்புமிகு